*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152(1) ஆவது பிரிவின் கீழ்க்குறிப்பிட்ட தொழிற் முயற்சிகள் மீது விதிக்கப்பட்ட வரி இந்த வரி வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வரவுகளுக்கு ஏற்புடையதாகக் கீழ்க் குறிப்பிடப்படும் தொகைக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். இதில் குறிப்பிட்ட தொழில் முயற்சிகள் மேற்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் முந்திய ஆண்டின் அத்தொழிலை நடாத்தியதற்கான கீழ்க்காணும் ஆவண ரீதியான ஆதாரங்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் வருடத்திற்கான வரிகளை கீழே தரப்பட்டுள்ள விபரங்களின் படி செலுத்துதல் வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக ஏனைய அரச வரிகளும் அறவிடப்படும்.*

*(1) முந்திய ஆண்டில் தொழிலுக்கான வருமான அறிக்கை, இறுதிக்கணக்கறிக்கை பிரதி ஒன்று.*

*(2) முந்திய ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமான வரி செலுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய பிரதி ஒன்று.*

**அட்டவணை**

| | நிரல் I வருடத்தின் வருடாந்த வரவு | நிரல் II செலுத்த வேண்டிய வரி ரூபா சதம் |
|---|---|---|
| 1. | ரூபா 6,000.00 இக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | எதுவும் இல்லை |
| 2. | ரூபா 6,001 இக்கு மேற்பட்ட எனினும் 12,000 இக்கு மேற்படாத போது | 90.00 |
| 3. | ரூபா 12,001 இக்கு மேற்பட்ட எனினும் 18,760 இக்கு மேற்படாத போது | 180.00 |
| 4. | ரூபா 18,761 இக்கு மேற்பட்ட எனினும் 75,000 இக்கு மேற்படாத போது | 360.00 |
| 5. | ரூபா 75,001 இக்கு மேற்பட்ட எனினும் 150,000 இக்கு மேற்படாத போது | 1,200.00 |
| 6. | ரூபா 150,000 இக்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் | 3,000.00 |

**தொழில் முயற்சிகள் பின்வருமாறு :**

1. தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
2. ஆடம்பரப் பொருட்கள் (சோடனைப் பொருள்) விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
3. சப்பாத்துக்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
4. தொலைத் தொடர்பு நிலையமொன்று நடத்துதல்.
5. படப்பிரதிகள் பெற்றுக்கொள்ளும் நிலையமொன்று நடத்துதல்.
6. வர்ண இரசாயன அறை நடத்துதல்.
7. ஏற்றுமதிக்காக தேயிலை தொழிற்சாலை ஒன்று நடத்துதல்.
8. தேயிலைக் கொழுந்துகள் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடத்துதல்.
9. கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
10. உடற்பயிற்சி நிலையமொன்று நடத்துதல்.
11. பெயின்ற் விற்பனை நிலையமொன்று நடத்துதல்.
12. இரும்புச் சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
13. தனியார் கல்வி நிலையமொன்று நடத்துதல்.
14. முன்பள்ளி பாடசாலை நிலையமொன்று நடத்துதல்.
15. கணினி சேவைகள் வழங்கும் வியாபார நிலையமொன்று நடத்துதல்.
16. கணினி பயிற்சி நிலையம் நடத்துதல்.
17. சோதிட சேவைகள் வழங்கும் நிலையம் நடத்துதல்.
18. சாரதி பயிற்சி நிறுவனம் நடத்துதல்.
19. மரக்கன்று விற்பனை நடத்துதல்.
20. ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் நடத்துதல்.
21. ஆங்கில மருந்து விற்பனை நிலையம் நடத்துதல்.
22. தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடத்தல்.
23. மேற்கத்திய மருந்து விற்பனை நிலையம் நடத்தல்.
24. வைத்திய இரசாயன அறை நடத்தல்.
25. மிருக வைத்திய நிலையம் நடத்தல்.
26. நொத்தாரிசுகள், சட்டத்தரணிகள், நில அளவையாளர்கள்
27. கணக்காளர் சேவை நடத்தல்
28. வங்கியொன்று நடத்தல்
29. காப்புறுதிச் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடத்தல்
30. லீசிங்சேவை வழங்கல்
31. நில அளவை சேவை வழங்கல்
32. வீடமைப்புத் துறை நிர்மாண சேவை வழங்கல்
33. சோதிட சேவை வழங்கல்
34. பொறியியல் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடத்தல்
35. விசேட வைத்திய சேவை நடத்தல்
36. தனியார் வைத்தியசாலை ஒன்று நடத்தல்
37. பிடவைக் கைத்தொழில் நிலையமொன்று நடத்துதல்
38. தங்க ஆபரணம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்தல்
39. கணினி உதிரிப்பாகங்கள் வழங்கும் வியாபார நிலையமொன்று நடத்துதல்
40. மர சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்தல்
41. விளம்பரங்கள் செய்யும் நிலையமொன்று நடத்தல்
42. விழாக்களுக்கான பொருட்களை குத்தகைக்கு விடும் நிலையமொன்று நடத்துதல்
43. மூக்குக் கண்ணாடிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
44. லொத்தர் சீட்டிழுப்பு நிலையமொன்று நடத்துதல்
45. மட்பாண்டங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
46. ஒட்டு பிடிக்கும் நிலையமொன்று நடத்துதல்
47. உப தபால் நிலையமொன்று நடத்துதல்

48. படங்கள் சட்டமிடும் நிலையமொன்று நடத்துதல்
49. இறப்பர், கறுவா விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
50. தொலைபேசி அறை ஒன்று நடத்தும் வியாபாரம்
51. நடமாடும் தொலைபேசி விற்பனை நிலையமொன்று நடத்துதல்
52. தொழில் முகாமை நிலையமொன்று நடத்துதல்
53. அடகு பிடிக்கும் நிலையமொன்று நடத்துதல்
54. படப்பிரதி/தொலைநகல்/டெலெக்ஸ் இயந்திரங்கள் பாவனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
55. காகிதாதிகள், பாடப்புத்தகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
56. மரப்பலகைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
57. சில்லறை வியாபார நிலையமொன்று நடத்துதல்
58. சங்கீத உபகரணப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
59. களஞ்சியமொன்று வாடகைக்குவிடும் நிலையமொன்று நடத்துதல்
60. மொத்த வியாபார களஞ்சியம் ஒன்று நடத்துதல்
61. மின்சாரப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
62. பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
63. பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு பொருட்கள் விளம்பரப்படுத்தும் நிலையமொன்று நடத்துதல்
64. வாகனம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
65. மோட்டார் வாகனம் விற்பனை செய்வோர் நிலையமொன்று நடத்துதல்
66. முச்சக்கர வண்டி விற்பனை செய்வோர்
67. வாகனம் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
68. முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
69. உராய்வு நீக்கிகள் நிரப்பும் நிலையம் நடத்துதல்
70. மதுபானங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
71. சினிமா நிலையம் நடத்துதல்
72. மணமகள் சிகை அலங்காரம் செய்யும் நிலையமொன்று நடத்துதல்
73. சாரதி பயிற்சி நிறுவனம் நடத்துதல்
74. மாணிக்கக்கற்கள் விற்பனை செய்வோர் மாணிக்கக்கற்கள் ஒப்பமிடுவோர்
75. வெளிநாட்டு தொழில் நிலையமொன்று நடத்துதல்
76. புட்சிட்டி நடத்தல்
77. தொலைபேசி முற்பண பற்று காட்விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
78. தேயிலை கைத்தொழில் நிலையம் நடத்தல்
79. இணையத்தள சேவை நடத்துதல்
80. விசித்திர மீன்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்
81. கட்டட வரைபட வரைஞராக தொழில் நடாத்துதல்
82. தரகர் சேவை நிலையம் நடாத்துதல்

06 -145/1

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

கட்டிடம் அமைத்தலுக்கான அனுமதியும், கட்டணங்கள் விதித்தலும் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21 ஆம், 78 ஆம் அத்தியாயங்களின் 1988.08.25 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV(ஆ) உள்ளூராட்சி 1 இல் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 08 ஆம் பிரிவின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் கட்டிடங்களுக்கு

அனுமதியும், பரீட்சித்தல் கட்டணமும் முன் அனுமதி பெறாமல் கட்டியவர்களுக்கான தண்டமும் கீழ்க்காணப்படும் அட்டவணைப்படி *2024.01.01* ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் என்பதை *2023.12.28* ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க சபைத் நிர்வாகக் கட்டளைக்கு அமைவாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை 1**

| இல. | நிலப்பரப்பு | வசிப்பிட, பொது பாவனைக்கு (ரூ) | வியாபார பாவனைக்கு (ரூ) |
|---|---|---|---|
| 01. | 1 - 45 சதுர மீற்றருக்கு | 500.00 | 1,000.00 |
| 02. | 45 - 90 சதுர மீற்றருக்கு | 1,500.00 | 2,000.00 |
| 03. | 91 - 180 சதுர மீற்றருக்கு | 2,500.00 | 3,000.00 |
| 04. | 181 - 270 சதுர மீற்றருக்கு | 3,500.00 | 4,000.00 |
| 05. | 271 - 450 சதுர மீற்றருக்கு | 4,500.00 | 6,000.00 |
| 06. | 451 - 675 சதுர மீற்றருக்கு | 5,500.00 | 8,000.00 |
| 07. | 676 - 900 சதுர மீற்றருக்கு | 6,500.00 | 10,000.00 |
| 08. | 901 - 1225 சதுர மீற்றருக்கு | 7,500.00 | 12,000.00 |
| 09. | 1226 க்கு மேற்பட்ட ஒவ்வொரு 90 சதுர மீற்றருக்கும் கட்டணம் | 1,000.00 | 1,250.00 |

**அட்டவணை 2**

கட்டிட விண்ணப்ப அனுமதி பெறாது அங்கீகாரத்தைக் கோரி கட்டிடம் கட்டுவதற்கான தண்டம் பின்வருமாறு அறவிடப்படும்.

| இல. | நிர்மாணத்தின் தன்மை | கீழ்தளத்தில் ஒவ்வொரு சதுர மீற்றருக்கு விதிப்பனவு ரூபா | மேல் தளத்தில் ஒவ்வொரு சதுர மீற்றருக்கு விதிப்பனவு ரூபா |
|---|---|---|---|
| 01. | அத்திவார வேலை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டது | 5.00 | - |
| 02. | கூரை தவிர்ந்த நிர்மாணித்தல் | 10.00 | 10.00 |
| 03. | கூரை உட்பட நிர்மாணித்தல் | 15.00 | 15.00 |
| 04. | முழுமையாக நிர்மாணித்தல் | 20.00 | 20.00 |
| 05. | மதில் அமைத்தல் | 5.00 | - |

**அட்டவணை 3**

தொலைபேசிக் கோபுரம் (டவர்) நிர்மாணிப்புச் சேவைக் கட்டணம் - ரூபா 235,000.00
(நிர்மாணித்தல் ரூ. 75,000.00 மேற்பார்வை ரூ. 10,000.00 மற்றும் பிரதேச அபிவிருத்தி ரூ. 150,000.00)

06 - 145/2

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2024

மேற்படி விடயமாக மாந்தை மேற்கு பிரதேச சபையினால் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சூழற்பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23 (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளைச்

சட்டத்தின் பிரகாரம், 1533/16 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் 1534/18 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக ''இ'' பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எமது சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு மாந்தை மேற்கு சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் வேண்டும் என்றும் இவ்வறிவித்தல் 28.12.2023 ஆந் திகதி MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாகக்கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

01. எல்லா வாகன எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் (திரவப் பெற்றோலியம் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு உட்பட).
02. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம்.
03. பத்துக்கு மேற்பட்டவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்
04. பத்துக்கு கூடுதலானவர்களும், 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பான வகைகள்.
05. உலர் பதனீட்டு முறைத் தொழிற்பாடுகளையுடைய அரிசி ஆலை.
06. ஒரு மாதத்திற்கு 1000 கிலோகிராமிலும் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்.
07. புகையிலைக் களஞ்சியங்கள்.
08. தொகுதியொன்றுக்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட கந்தகத்தூபமூட்டும் கொள்ளளவுடைய கறுவா தூபமூட்டும் கைத்தொழில்கள்.
09. உணவுக்குப் பயன்படுத்தப்படும் உப்பு சிப்பஞ் செய்தல், பதனிடுதல் கைத்தொழில்கள்.
10. தேயிலைத் தொழிற்சாலைகள்.
11. கொங்கிரீட் முன்வார்ப்புகள் கைத்தொழில்கள்.
12. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக்குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள்.
13. நாளொன்றுக்கு 20 மெற்றிக்தொன்னுக்கு குறைவான உற்பத்தித்திறன் கொண்ட சுண்ணாம்பு சூளைகள்.
14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்துக் கைத்தொழில்கள்.
15. எல்லா விதமான சுண்ணாம்புச்சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள்.
16. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள்.
17. வெடிமருந்துகளைப் பயன்படுத்தும் கம்மியர் சுரங்கத்தொழில், நடவடிக்கைகளுடனான ஒற்றைத்துளை தகர்ப்புகள்.
18. நாளொன்றுக்கு 50 கன மீற்றருக்கு குறைவான அரிக்கும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரோன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள்.
19. ஐந்துக்குக் கூடுதலான 25 இற்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ள பலநோக்கு தச்சுத் பொறி களைப் பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மர வேலைத் தளங்கள்
20. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 க்குக் குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வாடிவீடுகள்.
21. வாகனங்களைப் பழுதுபார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமரித்தல் செயற்பாடுகளையுடைய கராஜ்கள்.
22. குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுதுபார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்துப் பொருத்துதல், உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைத்தளங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச்சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள் பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட.

23. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன்சாலைகள்.

24. பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா விதமான மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல்.

25. ஈயம் உருக்குதல் புற நீங்கலாக அச்சுக்கூடங்களும் எழுத்தச்சுப் பொறிகளும்.

## பரிசோதித்தல் கட்டணம்

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான ஆகக்கூடிய கட்டணம் உரிய கைத்தொழில் அல்லது வேலைத்திட்டத்தின் முதன்மை மூலதன முதலீட்டின் மீதான அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இந்த பரிசோதித்தல் கட்டணம் கீழ்க் குறிப்பிட்டவாறு ஆகக்கூடிய ஒன்றிற்கு அமைவாக அறவீடு செய்யப்படும்.

| முதன்மை முதலீடு | வெளிக்கள பரிசோதனைக் கட்டணம் (ஆகக்கூடிய கட்டணம்) ரூபா |
|---|---|
| 01. ரூபா 25,000.00 அதற்குக் குறைவானதும் | 3,519.00 |
| 02. ரூபா 25,001.00 லிருந்து ரூபா 500,000.00 வரை | 4,398.00 |
| 03. ரூபா 500,001.00 லிருந்து ரூபா 1,000,000.00 வரை | 5,865.00 |
| 04. ரூபா 1,000,001.00 லிருந்து ரூபா 10,000,000.00 வரை | 11,730.00 |

சுற்றாடல் பாதுகாப்பு உரிமக்கட்டணம் ரூபா 5,161.20 (மூன்று வருடத்துக்கு ஒரு தடவை) இவற்றுக்கு மேலதிகமாக ஏனைய அரச வரிகளும் அறவிடப்படும்.

06-145/3

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

### களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி அறவிடுதல் - 2024

களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 இல் உள்ள உப பிரிவு 1 நியதிகளின் படி திரைப்படக்காட்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக் காட்சி, நாடக செயலாற்றுகைக் காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சிக்காட்சி ஆகியவற்றுக்கு அச்சிடப்படும் நுழைவுச்சீட்டுகளின் பெறுமதியின் 5% களியாட்ட வரியாக அறவிடுவதற்கு MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்றும் அதற்காக கீழே குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவுப்பத்திரக் கட்டணம் பொது செயலாற்றுகைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 176(3) இலுள்ள பிரிவு 3 நியதிகளின் படி செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

01. சங்கீத இசை நிகழ்ச்சி, நாடக செயலாற்று திரைப்படக் காட்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக் காட்சி (நாள் ஒன்றுக்கு) ரூ. 1000.00

02. திரைப்படக் காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சி, வித்தைக்காட்சி, மாயாஜாலக் காட்சி (மேலதிக ஒவ்வொரு) நாளுக்கும் ரூ. 500.00

03. நாடகச் செயலாற்றுகை பொருட்டு நாள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 500.00

06-145/ 4

## மாந்தை மேற்கு பிரதேச சபை

### கொண்டு திரிந்து விற்கும் (நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமை) வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு வரி விதித்தல் - 2024

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1998.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் ''பகுதி IV (ஆ)'' உள்ளூராட்சி பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையின்படி 28.12.2023 ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

| | |
|---|---|
| 01. துவிச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 50.00 |
| 02. மோட்டார் சைக்கிளில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ 100.00 |
| 03. முச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 200.00 |
| 04. மோட்டார் வாகனத்தில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 200.00 |
| 05. தயாரிக்கப்பட்ட உணவு வகை நடமாடும் வாகனத்தில்/துவிச்சக்கர வண்டியில் விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 50.00 |
| 06. மோட்டார் சைக்கிளில் மரக்கறி விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 100.00 |
| 07. சிறியரக வாகனத்தில் மரக்கறி விற்பனை செய்தல் (நாள் ஒன்றுக்கு) | ரூ. 200.00 |
| 08. நிறுவனங்களின் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு (நாள் ஒன்றுக்கு) | ரூ. 2000.00 |

06-145/5

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

### வாகன, மிருகங்கள் மீதான வரிகள் - 2024

*இவ்வறிவித்தல் 2023.01.01 ஆந் திகதியிலிருந்து தொடரப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி 148(2) ஆவது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் நியதிகளின் படி வாகனம் மற்றும் மிருகங்களுக்கான வரி மேற்கூறப்பட்ட சட்டத்தின் 147 ஆவது பிரிவின் கீழ்க் கொடுக்கப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இதன்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்றும் MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறியத்தருகின்றேன்.*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II ரூபா சதம் |
|---|---|
| ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி அல்லது முச்சக்கர வண்டி அல்லது துவிச்சக்கர கார் | |
| அ. வர்த்தக நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்துவதாயின் | 18.00 |
| ஆ. வர்த்தக நடவடிக்கை தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டால் (படிவம் 6.00, உரிமம் 4.00) | 20.00 |
| ஒவ்வொரு வண்டிக்கும் | 10.00 |
| ஒவ்வொரு கை வண்டிக்கும் | 20.00 |
| ஒவ்வொரு ரிக்ஷோவுக்கும் | 7.00 |
| ஒவ்வொரு நாய்க்கும் | 20.00 |

இருபத்தாறு அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சில்லுகளைக்கொண்ட பிள்ளைகளின் வண்டிகள், தள்ளுவண்டிகள், தனியார் வளவில் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாத கைவண்டிகள் என்பன கொடுப்பனவில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இவ் அட்டவணையில் வியாபார நோக்கங்கள் என்பது, ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்துடன் தொடர்புடையதாக விற்பனைக்கோ அல்லது வேறெதற்காகவோ எவையேனும் பொருட்களை அல்லது பண்டங்களை அல்லது ஏதேனும் எழுத்தினாலான அல்லது ஏற்றுதலை கொண்டு செல்லுதலை உள்ளடக்கும்.

06-145/6

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

விளம்பர அறிவித்தல் கட்டணம் - 2024

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126-7 ஊ பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 2016.02.02 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள (91/A, 92/A, 93/A, 94/A, 95/A, 96/A, 97/A, 98/A, 99/A) பக்கங்களில் 2017.09.08. ஆந் திகதிய 2036 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணைவிதியின் ஏற்பாடுகளின்படி மாந்தை மேற்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின் மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு மாந்தை மேற்கு பிரதேச சபையினது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பர கட்டணங்களை அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். இவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் 2023.12.28 ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கபட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

01. சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறும் ஒன்றின் உதவியுடன் (தகரம், பிலெக்ஸ், லுமினஸ்) அல்லது வேறும் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தலுக்கு - சதுர அடிக்கு ரூபா 100.00

02. ஒரு மாதத்துக்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகைக்கு - சதுர அடிக்கு ரூபா 30.00

03. ஒரு மாதத்துக்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகைக்கு - சதுர அடிக்கு ரூபா 20.00

04. கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லைக்கு - சதுர அடிக்கு ரூபா 40.00

05. கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்கு - சதுர அடிக்கு ரூபா 30.00

06. வர்த்தக நிலையங்களில் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்ப்பலகை தவிர்ந்த வேறும் பெயர்ப்பலகைகளை காட்சிக்கு வைப்பதற்கு - சதுர அடிக்கு ரூபா 50.00

07. டிஜிடல் பெயர்ப் பலகை காட்சிக்கு வைப்பதற்கு - சதுர அடிக்கு ரூபா 100.00

08. திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட திரைப்படக் காட்சிகள் தவிர்ந்த ஏனைய திரைப்படக் காட்சிகள், உதவி திரைப்படக் காட்சிகள், கண்கட்டி வித்தைக் காட்சிகள், நடன நிகழ்ச்சிகள், சர்கஸ் நிகழ்ச்சிகள், அனைத்து சங்கீத நிகழ்ச்சிகள் சம்பந்தமாகவும் விற்பனை செய்யப்படுகின்ற ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்திலிருந்து 10% வரி செலுத்தப்படல் வேண்டும்.

09. பகிரங்க காட்சிகளுக்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒரு நாளைக்கு - சதுர அடிக்கு ரூபா 1,000.00

10. ஒளிபுக கூடிய விளம்பரம் - சதுர அடிக்கு ரூபா 150.00

06-145/7

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்களுக்கான கட்டணம் அறவிடுதல் - 2024

சபைக்குச் சொந்தமான பின்வரும் வகையுடைய வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும்போது பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடப்படல் வேண்டும் என MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

**அட்டவணை**

01. ஜேசிபி வாகனம் - ஒரு மணித்தியாலத்திற்கு அறவிடப்படும் கட்டணம் - ரூபா 7,500.00
02. ஜேசிபி வாகனம் - ஒரு மணித்தியாலத்திற்கு (அரச திணைக்களங்கள், ஆலயங்கள்) அறவிடப்படும் கட்டணம் - ரூபா 7,500.00
03. வீதி அதிர்வு உருளை - ஒரு மணித்தியாலத்திற்கு (டீசல் உட்பட) - ரூபா 6,000.00
04. தட்டு வாடகை - ரூபா 2500.00 (நிலையானது) அத்துடன் ஒரு கிலோமீட்டருக்கு - ரூபா 200.00
05. புல்லுவெட்டும் இயந்திரம் 1 மணித்தியாலத்திற்கு (டீசல் உட்பட) - ரூபா 3500.00

06-145/8

## மாந்தை மேற்கு பிரதேச சபை

சபையின் தண்ணீர்க் கட்டணம், தண்ணீர்த் தாங்கி வாடகைக்கு விடல் கட்டணம் - 2024

இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து விளைவுறும் வண்ணம் தண்ணீர்த்தாங்கி வாடகைக்கு விடல், தண்ணீர் விநியோகத்தின் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும் என MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

01. 5,000 லீற்றர் பௌசர் தண்ணீர் கட்டணம் - ரூபா 4,000.00
02. 5,000 லீற்றர் தண்ணீர் இல்லாது தண்ணீர்த்தாங்கி (நாள் ஒன்றிற்கு) - ரூபா 4,000.00
03. 6,000 லீற்றர் பௌசர் தண்ணீர் கட்டணம் - ரூபா 4,500.00

(10 கிலோமீட்டருக்கு உட்பட்ட துரத்திற்கே ரூபா 4000.00 அதற்கு மேலதிகமான ஒவ்வொரு கிலோமீட்டருத்தும் தலா ரூபா 100.00 வீதம் அறவிடப்படும்).

06-145/ 9

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

கழிவகற்றல் சேவைக் கட்டணம் அறவிடல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் மற்றும் 126 IX(ஆ) மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2023.12.28 ஆந் திகதியுடைய தீர்மான இல. MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக காணப்படும் பிரேரணையினை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கின்றேன்.

அதன் பிரகாரம் மாந்தை மேற்கு பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்டதாக அறிவிக்கப்படும் பிரதேசங்களுக்கு பின்வருமாறு குப்பைக் கட்டணம் அறவிடப்படும்.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

01. மளிகைக் கடை, போசணசாலை, வன்பொருள் கடை மற்றும் சிகை அலங்கார நிலையம் ஒரு மாதத்திற்கு ரூபா 500.00
02. வியாபார நிறுவனங்கள் - ஒரு மாதத்திற்கு ரூபா 500.00
03. ஓய்வு விடுதி - ஒரு மாதத்திற்கு ரூபா 500.00
04. அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் - ஒரு மாதத்திற்கு ரூபா 500.00
05. தொழிற்சாலைகள் - ஒரு மாதத்திற்கு ரூபா 5,000.00
06. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கு - கலிபவுசர் - அடம்பன் உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு (ஒரு தடவைக்கு) ரூபா 10,000.00
07. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கு - கலிபவுசர் - விடத்தல் தீவு, உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு (ஒரு தடவைக்கு) ரூபா 11,000.00
08. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கு - கலிபவுசர் - இலுப்பைக் கடவை உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு (ஒரு தடவைக்கு) ரூபா 12,000.00

09. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கு - கலிபவுசர் மடு உப அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு (ஒரு தடவைக்கு) ரூபா 12,000.00

10. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கு - கலிபவுசர் - எமது சபையின் எல்லைக்கு வெளியே (ஒரு தடவைக்கு) ரூபா 12,000.00 (எமது பிரதேச எல்லையை தாண்டி ஒவ்வொரு கிலோமீட்டரும் தலா ரூபா 100.00 வீதம் அறவிடப்படும்)

11. கழிவகற்றும் தாங்கி பாவனைக்கும் கலிபவுசர் - தண்ணீர் கழிவுக்கு பட்டும் எனது எல்லைக்குள் (ஒரு தடவைக்கு - ரூபா 5,000.00

12. கொல்கள அறுவைக்கட்டணம் - மாடு ரூபா 1,000.00
ஆடு ரூபா 500.00

13. கோரிக்கையின் பேரில் குப்பை அகற்றுதல் 1 குப்பை வண்டிக்கு ரூபா 2,000.00

14. கோரிக்கையின் பேரில் குப்பை அகற்றுதல் 1 குப்பை வண்டிக்கு ரூபா 4,000.00

06-145/10

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

வாகனம் நிறுத்தல் கட்டணம் அறவிடல் - 2024

01. நாளாந்தம் சேவையில் ஈடுபடும் மினிபஸ், ஓட்டோ வாகனங்களுக்கான நிறுத்தல் கட்டணம் ரூபா 30.00

02. லொறி, கன்ரர் (பெரிய வாகனங்கள்) வாகனங்களுக்கான நிறுத்தல் கட்டணம் - ரூபா 100.00

03. வான், கார் (சிறிய வாகனங்கள்) வாகனங்களுக்கான நிறுத்தல் கட்டணம் - ரூபா 50.00

04. ஆட்டோ நிறுத்தல் கட்டணம் - ரூபா 20.00

05. மோட்டார் சைக்கிள் நிறுத்தல் கட்டணம் - ரூபா 10.00

06. சைக்கிள் நிறுத்தல் கட்டணம் - ரூபா 5.00

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

06-145/11

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

கட்டாக்காலி மாடுகளுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 66 ஆவது பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உப பிரிவின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய மாந்தை மேற்கு பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதாவது வீதியில் அல்லது அதனைச் சூழவுள்ள இடங்களில் கட்டி அல்லது கூட்டங்களாக திரியும் ஏதாவது எருமை, மாடு, ஆடு பிடித்து விடுவிக்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படுமென MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

01. பெரிய மாடு, எருமை பிடித்து விடுவிக்கும் போது அறவிடும் கட்டணம் - ரூபா 2500.00
02. சிறிய மாடு அல்லது சிறிய எருமையை பிடித்து விடுவிக்கும் போது அறவிடும் கட்டணம் - ரூபா 1,000.00
03. ஆடு ஒன்றைப்பிடித்து விடுவிப்பதற்கு - ரூபா 1,000.00
04. தொழுவத்தில் ஒரு நாளைக்கு வைத்திருப்பதற்கான கட்டணம் மாடு ஒன்று, எருமை ஒன்று, ஆடொன்று சிறிய எருமை ஒன்று - ரூபா 300.00

06-145/12

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

நாய்களைப் பதிவு செய்யும் கட்டணம் அறவீடு செய்தல் - 2024

நாய்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் (477 ஆம் அதிகார சபை) 4 ஆவது பிரிவின் பிரகாரம் மாந்தை மேற்கு பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் எந்த ஒரு பிரதேசத்திலும் இருக்கின்ற -

01. ஒவ்வொரு நாய்க்காக 5.00 ரூபா வீதம் பதிவு செய்யும் கட்டணம்
02. மேற்கூறப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக 50.00 ரூபா சேவைக் கட்டணமாக 2023 ஆம் ஆண்டில் குறிக்கப்பட்டு அறவீடு செய்து கொள்வதற்கும்

MN/MWPS/2022/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாகக் கட்டளைக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

06-145/13

---

## மாந்தை மேற்கு பிரதேச சபை

சான்றிதழ்களுக்கும் படிவங்களுக்குமான கட்டணம் விதித்தல் - 2024

இவ்வறிவித்தல் 2023.01.01 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் சான்றிதழ்கள், படிவங்கள் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும் என்று MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க 2023.12.28 ஆந் திகதிய நிர்வாககட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறியத்தருகின்றேன்.

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

01. கட்டிட விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா 500.00
02. வியாபார உரிம, வரி படிவக்கட்டணம் ரூபா 500.00
03. குடியமர்வுச் சான்றிதழ் கட்டணம் (C.O.C.) ரூபா 1,000.00
04. குடியமர்வுச் சான்றிதழ் படிவக்கட்டணம் (C.O.C.) ரூபா 500.00
05. ஆதனம் உரிமச்சான்றிதழ் கட்டணம் ரூபா 1,000.00
06. வீதி எல்லைச் சான்றிதழ் கட்டணம் ரூபா 1,000.00
07. கேள்விகோரல் படிவம் ரூபா 1000.00
08. துவிச்சக்கரவண்டி உரிம படிவக்கட்டணம் ரூபா 100.00
09. படவரைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 5,000.00
10. படவரைஞராக பதிவு செய்வதற்கான படிவக் கட்டணம் ரூபா 1,000.00

11. மாட்டுப்பபடிவக் கட்டணம் ரூபா 50.00
12. வழங்குநர்களை பதிவு செய்தல் கட்டணம் ரூபா 1000.00
13. சுற்றுச்சூழல் உரிம படிவக் கட்டணம் ரூபா 500.00
14. வீதி எல்லைச்சான்றிதழ் படிவக் கட்டணம் ரூபா 500.00

06-145/14

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

*பொது விளையாட்டு மைதானத்தை பாவிப்பதற்கான கட்டணம் அறவிடுதல் - 2024*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 2016.02.02 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள 2017.09.08 ஆந் திகதிய 2036 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, மாந்தை மேற்கு பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்திற்கான கட்டணமாக நாளொன்றுக்கு (எட்டு மணித்தியாலம்) ரூ. 2000.00 ஐ விதித்து அறவிடுவதென 2023.12.28 ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாககட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

06-145/15

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

*நீர் விநியோகக் குழாய் பொருத்துவதற்காக வீதியை வெட்டுவதற்கான கட்டணம் அறவிடல் - 2024*

*இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து விளைவுறும் வண்ணம் நீர் விநியோகக் குழாய் பொருத்துவதற்காக, பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று வீதியை வெட்டும் போதும் பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2023.12.28 ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

| | விபரம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01. | வீதியின் நடைபாதை ஓரம் குழி வெட்டுதல் | 150.00 |
| 02. | வீதியின் புயத்துக்கு அப்பால் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 25.00 |
| 03. | வீதியின் புயத்தில் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 50.00 |
| 04. | 3 வருடத்திற்குள் புதிதாக புனரமைக்கப்பட்ட வீதியின் குறுக்காக குழி வெட்டுதல் | 6,500.00 |
| 05. | 3 வருடத்திற்கு முன் புனரமைக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீதியின் குறுக்காக குழி வெட்டுதல் | 3,500.00 |
| 06. | 3 வருடத்திற்கு முன் புனரமைக்கப்பட்ட பழுதடைந்த நிலையில் உள்ள வீதியின் குறுக்காக குழி வெட்டுதல் | 2,000.00 |

06-145/16

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

*சிறுவர் பூங்காக் கட்டணம் அறவிடல் - 2024*

*இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து விளைவுறும் வண்ணம் எமது சபைக்குரிய சிறுவர் பூங்காக்களில் சுப நிகழ்வுகளுக்காக போட்டோ மற்றும் வீடியோ எடுக்கப்படும் போது பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2023.12.28 ஆந் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

01. சுபநிகழ்விற்காக போட்டோ எடுப்பதற்கான கட்டணம் ரூபா 100.00
02. சுபநிகழ்விற்காக வீடியோ எடுப்பதற்கான கட்டணம் ரூபா 200.00

06-145/17

---

**மாந்தை மேற்கு பிரதேச சபை**

*தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம் அறவிடல் - 2024*

*இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள சேவை வழங்கும் தொலைதொடர்பு கோபுரங்களுக்கு 2023 ஆம் ஆண்டில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணங்களை அறிவிடுவததென 2023.12.28 ஆம் திகதிய MN/MWPS/2023/12/102 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றிற்கான கட்டணம் (ஒரு வருடத்திற்கு) - ரூ. 10,000.00*

அ. டென்சில் பர்னாந்து,
செயலாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.
அடம்பன்.

பிரதேச சபை அலுவலகம்,
மாந்தை மேற்கு,
அடம்பன்.

06-145/18

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.